DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 202/2024**
**Deposition of LW1 examined as PW1** Dt. 07.07.2025

| | |
|---|---|
| Name | பிரகலாதன் |
| Father's/Husband's Name | மணி |
| Village | காத்திருப்பு |
| Taluk | |
| Age | 39/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 07.07.2025

(A1,A3,A4 present. A2 called absent. U/s.355 BNSS petition filed and allowed )

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து லாரி டிரைவராக வேலை செய்து வருகிறேன். காத்திருப்பில் எனது வீட்டிற்கு எதிர்புறத்தில் 40 குழி புறம்போக்கு இடம் உள்ளது. மேற்படி இடம் 40 வருடங்களுக்கு மேலாக எங்களுடைய குடும்பத்தின் கட்டுபாட்டில் இருந்து வருகிறது. மேற்படி இடத்தில் எதிரி மணிமாறன், அவரது தம்பி சிற்றரசனும் ஆகியோர்கள்அந்த இடத்திற்கு பக்கத்தில் அவர்களுடைய இடம் இருப்பதால் எங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் இடத்தில் அவர்களுடைய பங்கு உள்ளது என்று கூறினார்கள். சர்வையர் வைத்து அளந்து ஊர்காரர்கள் முன்னிலையில் பேசிக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது, இந்நிலையில் கடந்த 06.10.2020 ம் தேதி மாலை 4.00 மணியளவில் எங்கள் கட்டுபாட்டில் உள்ள புறம்போக்கு இடத்தில் உள்ள வேலியை எதிரி மணிமாறன் தீயிட்டு கொளுத்தினார். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு மணிமாறன் என்னை குச்சிக்காரி மகனே, தேவிடியா மகனே என்று திட்டி என்னுடைய வலது பக்க மேல் தலையில் அரிவாளால் வெட்டினார். தலையில் வெட்டுக்காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது. மணிமாறன் தம்பி சிற்றரசன். மணிமாறன் மகன் அ ருண்மாறன் மற்றும் வீரமணி ஆகியோர் எனது இடது பக்க தோள்பட்டை மற்றும் உடல் முழுவதும் அடித்தார்கள், கீழே தள்ளி மிதித்தார்கள். எதிரிகள் தாக்கியதில் நான் வலிதாங்கமுடியாமல் கத்தியதால் சத்தம் கேட்டு பாக்கியராஜ் மற்றும் சத்தியவாணி என்னை அழைத்து சென்றார்கள். எதிரிகள் 4 பேரும் இடத்திற்கு உரிமைகோரினால் அடித்தே கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதில் மணிமாறன் கையில் அரிவாளை காட்டி மிரட்டினார். பின்னர் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பாக்கியராஜ் என்பவர் அவரது இரு சக்கர வாகனத்தில் அழைத்து சென்றார். அ ங்கு தலையில் எனக்கு 7 தையல்கள் போடப்பட்டது. உள்நோயாளியாக 15 நாட்கள் தங்கி சிகிச்சை எடுத்து கொண்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது முதல் விசாரணையில் 40 வருடமாக புறம்போக்கு இடம் என்னிடம் உள்ளதாக தெரிவித்துள்ளேன் அதற்கான ஆவணங்கள் ஏதும் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறான ஆவணங்கள் ஏதும் போலீசார் என்னிடம் கேட்டார்களா என்றால் இல்லை. எதுகளுக்கும் எனக்கும் இடம் சம்பந்தமான பிரச்சினை தான் என்றால் சரிதான். 1ம் எதிரி தொடர்ந்து மூன்று முறை எங்களது ஊர் ஊராட்சி மன்ற தலைவர் என்றால் சரிதான். 4 வது எதிரி ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். என் மீது காவல் நிலையத்தில் குற்றவழக்கு உள்ளதா என்றால் உள்ளது. அது என்ன வழக்கு என்றால் திருட்டு வழக்கு. முள்வேலி வைத்து அடைத்து வைத்ததாக கூறப்படும் இடத்திலிருந்து எனது வீடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 50 மீட்டர் தூரத்தில் உள்ளது. சீர்காழி முதல் கருவி வரையிலான சாலையை அகலப்படுத்த இடம் கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் தெருக்காரர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் பாக்யராஜ் மட்டும் தான் இருந்தார். சாலை பணியாளர்கள் வட மாநிலத்தவர்கள் தான் இருந்தார்கள். பாக்கியராஜ் பக்கத்து தெருக்காரர் ஆவார். சாலையை அகலப்படுத்த புறம்போக்கு இடத்தை எடுத்துக் கொள்ள 1-வது எதிரி ஊராட்சி மன்ற தலைவர் என் றஅடிப்படையில் ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விராரணையில் இடம் சம்பந்தமாக பேசிக் கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது என தெரிவித்துள்ளேன் அது எந்த தேதி என்றால் 2022 ஆம் ஆண்டு தேதி நினைவில்லை. யார் யார் முன்னிலையில் பேசி முடிவெடுக்கப்பட்டது என்று போலீசாரிடம் தெரிவித்தேனா என்றால் அது பற்றி போலீசார் விசாரிக்கவில்லை. என் னுடை ய தகப்பனார் மீதும் குற்றவழக்கு உள்ளது என்றால் சரிதான். குண்டர் தடுப்பு சட்டத்தில் அவர் சிறையில் இருந்தார் என்றால் சரிதான். 40 வருடமாக என்னிடம் மேற்படி புறம்போக்கு இடம் அனுபவத்தில் இருந்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தில் வேலி வைத்திருந்தேன் என்றும் அதற்காக 1வது எதிரி என் மீது புகார் கொடுத்தார் என்றும் அதிலிருந்து தப்பிப்பதற்காக வேறு எங்கோ அடிபட்டதை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் மேற்படி நிலம் என்னுடைய அனுபவத்தில் இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றும் அந்த இடத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் விசாரிக்க பட்ட பட்டியல் சாட்சிகள் அனைவரும் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. நான் குற்றப் பின்னணி உள்ளவர் என்பதால் புகார் எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பது நன்கு அறிந்தபடியால் எதிரிகள் மீது மிகைப்படுத்தி போலீசாரிடம் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியில்லை. எதிரிகள் எந்த காலத்திலும் என்னை தாக்கவில்லை என்றாலும் கொச்சை வார்த்தைகள் கூறி திட்டவில்லை என்றாலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி இடத்தில் எனக்கு அனுபவ பாத்தியம் இருந்திருந்தால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி இருப்பேன் என்றாலும்

அவ்வாறு இல்லாததால் தான் எதிரிகள் மீது இவ்வாறு பொய்யான புகார் வாக்குமூலம் அளித்து அந்த இடத்தை அபகரிக்க பார்க்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

7.7.25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை